1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச்சாலை 9.6 கி.மீ. நீளமுள்ள தார் சாலையாகும். இதில் 0/0-5/6 வரை மற்றும் கி.மீ. 7/2—9/6 வரையிலான பகுதி அரசு மாவட்ட இதர சாலைகளாக நெடுஞ்சாலைத் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை தவிர சாலையில் கி.மீ. 5/6 முதல் 7/2 வரையுள்ள இடைப்பட்ட பகுதியான 1.6 கி.மீ. தூரம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலுள்ள பகுதியை நெடுஞ்சாலையிடம் ஒப்படைத்து பழுதடைந்த பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு சாலையில் பேருந்து இயங்குகிற நாளிலிருந்து அந்தச் சாலை ஒன்றிய சாலையாக இருந்தாலும், பஞ்சாயத்து சாலையாக இருந்தாலும், நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்வதுதான் நடைமுறையாக இருந்து வருகிறது. இந்தக் குறிப்பிட்ட சாலையைப் பொறுத்தவரையில் 15 ஆண்டுகளாகப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தும் தவறுதலாக விடப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனவே தற்போது பரிசீலனையில் இல்லையென்று சொன்னாலும் அந்தச் சாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக போக்குவரத்து உள்ள சாலையாக இருப்பதால் 4, 5 பேருந்துகள் அதிலே இயங்கிக் கொண்டிருப்பதாலும், அந்தச் சாலை ஒன்றிய சாலையிலிருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு எடுத்துக்கொள்ளப்படவும், மேலும் அந்தச் சாலையில் இருக்கிற பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்துத் தரவும் அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சாலையின் முக்கியத்துவத்தை அறிந்து இந்த ஆண்டிலே அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்டு அந்தப் பாலம் புதுப்பிக்கப்படும்.

தேனியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம்.

201—(*வினா எண். 18424)—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் ஒரு விளையாட்டு மைதானம் (Stadium) அமைக்க தேனி-அல்லி நகரம் நகராட்சியிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாவை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தேனியில் ஒரு விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு தேனி அல்லி நகரம் நகராட்சியின் ஆய்வில் உள்ளது. அச்செயற்குறிப்பு அரசுக்கு இன்னும் வரவில்லை.

(ஆ) விளையாட்டு மைதானம் அமைப்பதற்குத் தேவையான நிலங்களைப் பெற காட்டு இலாகாவினரிடமும் மற்றும் சிட்கோ நிறுவனத்தாரிடமும் நகராட்சி ஆணையரால் தொடர்பு கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அய்யலூர்-ஆலம்பாடி சாலை அமைக்கும் பணி.

202—(*வினா எண். 19863)—திரு. வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுகாவில் அய்யலூர்-ஆலம்பாடி சாலை அமைக்க 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 28 இலட்சம் அரசு ஒதுக்கியும் இன்னும் வேலை ஆரம்பிக்கப் படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இச்சாலைப்பணி 1982-83 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்ட வேலைகளின் கீழ் இதர சாலைப் பிரிவில் மேற்கொள்ள ரூ. 20 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குத் தலைமைப் பொறியாளர் தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளார். சாலைப் பகுதி 6 கிலோமீட்டரிலிருந்து 8 கிலோமீட்டர் வரையில் மண்வேலை முடிவடைந்து உள்ளது. சாலைப் பகுதி 8 கி.மீ.-லிருந்து 12 கி.மீ. வரையில் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. சிறு பாலப்பணிகளாக அந்தப் பணியில் 25 குழாய்ப் பாலப் பணிகள் உள்ளடங்கியுள்ளன. 11 பணிகளில் ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மற்றும் 11 பணிகளில் ஒப்பந்தங்கள் பரிசீலனையில் உள்ளன. மீதமுள்ள 3 பணிகளில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மண் ரோடு போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த ரோடில் கூட சமீபத்தில் பெய்த மழை காரணமாக மண் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறதே, அது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்துள்ளதா ? மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நேஷனல் ஹைவேஸ், ஹைவேஸ் சாலைகள், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்